1981 பிப்ரவரி 6]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) கரூர் அரசினர் கலைக் கல்லூரி, தான்தோனிமலை அருள்மிகு வெங்கடராமசுவாமி கோவிலுக்குச் சொந்தமான நிலத்தில் நெடுங் காலமாக இருப்பதாலும், கல்லூரியை அங்கிருந்து அகற்ற சாத்தியமில்லாததாலும், அந்நிலத்திற்குரிய மதிப்பை நிர்ணயித்து, அத்தொகையைக் கோவிலுக்குக் கொடுக்க அரசு ஆலோசித்து வருகிறது, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியாளரை அந்நிலத்திற்குரிய மதிப்பை நிர்ணயிக்கும்படி அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்விகள் 209, 210, 211, 212 ஆகியவை தள்ளி வைக்கப்படுகின்றன.

காளப்பநாயக்கன்பட்டி—சேந்தமங்கலம் குடிநீர்த் திட்டங்கள்.

*வினா எண் 213—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சேலம் மாவட்டத்திலுள்ள காளப்ப நாயக்கன்பட்டி, சேந்தமங்கலம் பகுதிகளுக்கு குடிநீர் திட்டங்கள் நிறைவேற்ற அரசுக்கு உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) உண்டு.

(ஆ)) காளப்ப நாயக்கன் பட்டி, பேரூராட்சி மற்றும் வழியோரக் கிராமங்களான நடுக்கொம்பை, நாச்சிபுத்தூர் ஆகியவற்றிற்கும் சேர்த்து கருவட்டாறு ஆற்றினை ஆதாரமாகக் கொண்டு கூட்டு குடிநீர்த் திட்டம் அமைக்க ஆய்வுப் பணி நடைபெறுகிறது. ஆய்வுப் பணி முடிந்த பின் உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதல் கிடைத்த பின் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

சேந்தமங்கலம் பேரூராட்சிக்கு குடிநீர்த் திட்டம் செயல்படுத்த அரசு ஆணை எண் 1467, ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறை, நாள் 16–9–1978 இல் ரூபாய் 24.13 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தலைமையிடம் அமைப்பதில் ஆட்சேபனை எழுப்பப்பட்டு நாமக்கல் முனிசீப் கோர்ட்டில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது. ஆதலால் பணிகள் அனைத்தும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.